27.06.2008

<u>செய்தி வெளியீடு</u>

ஃபீல்டு மார்ஷல் எஸ்.எச்.எப்.ஜே. மானெக்ஷா அவர்கள் இன்று காலை இயற்கை எய்தினார் என்ற செய்தியை அரசு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்வதுடன், இதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் இன்று ஒருநாள் துக்கம் அனுசரிக்குமாறு தமிழக அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அரசு அலுவலகங்களில் தேசிய கொடி இன்று அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும். நீலகிரி மாவட்டத்தில் அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளிக்கூடங்களுக்கு இன்று ஒருநாள் (27.06.2008) விடுமுறை அளிக்கப்படுகிறது. ஆயினும் அத்தியாவசியப் பணிகள் தடையில்லாமல் நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. இன்று நடைபெறும் தேர்வுகள் தடையின்றி தொடர்ந்து நடைபெறலாம். இன்று அரசு விழாக்கள் எதுவும் நடைபெறாது. அரசு மரியாதைகளுடன் அவரது உடல் இன்று மாலை உதகையில் நல்லடக்கம் செய்யப்படுகிறது என்று அரசு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

27/6